24th March 1964]

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கோக்கோ பயிரிடுவதற்கு எத் தகைய சூழ்நிலை வேண்டும் என்ருவது வெளியிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நல்ல நிலம், சீதோஷ்ண நிலை ஆகியவை களை எல்லாம் பார்த்து அதிகாரிகள் நிர்ணயம் செய்கிருர்கள். கோக்கோ வளர்வதற்குத் தகுந்த இடமாக இருக்கவேண்டும்.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கொல்லிமலையில் பல இடங்கள் இருக்கின்றன. நாலாயிரம் அடிக்கு மேல் இருப்பதனல் அங்கே கோக்கோ பயிரிடும் சூழ்நிலை இருக்கிறது. அங்கே அதிகம் பயிரிட வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது பரிசிலனை செய்யப்படுகிறது என்று சொன்னேன். சில செடிகளை வைக்கிருர்கள். அது சரியாக வளரு கிறதா என்று பார்த்து பின்னல் அதிகமாகப் பயிரிடுவார்கள்.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** அதே கொல்லிமலையில் கோக் கோவோடு கூட ஏலக்காய் போன்ற பயிர்கள் வைக்க வாய்ப்பு இருக்கிறது. அதையும் சேர்ந்தாற்போல் வைத்துப் பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக்கேள்வி போடவேண்டும்.

### கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

* 382 கேள்வி—**திரு. சா. ராமசாமி:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி-தஞ்சை மாவட்டங்களின் இணைப்பின் பொருட்டு விளாங்குடிக்கும் திருமானூருக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Government approved the construction of a causeway at the site at a cost of Rs. 14 lakhs from the Central Road Fund Allocations. After detailed investigation, it is found necessary to construct a causeway with multi-cell box vents at a cost of Rs. 36 lakhs to cater to the needs of the traffic and to withstand floods. The Government of India have been addressed for their approval to meet the additional amount of Rs. 22 lakhs from the Central Road Fund allocations. Their reply is awaited.

**திரு. சா. ராமசாமி :** இப்போது இருக்கின்ற நிலைமையில் அந்தத் திட்டம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் நிறைவேறுமா ? அல்லது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது நிறை வேறுமா ?

**கனம் திரு. வெ. ராமையா** : மத்திய அரசாங்கத்தினிடம் இப்போது திருத்த மதிப்பீடு வைத்து இருக்கிறோம். அது திட்டவட்டமாகத் தெரிந்ததற்குப் பிறகு தான் எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேறும் என்று சொல்ல முடியும்.

**அரசியல் தியாகிகளுக்கு காதித் துறையில் வேலை**

*383 **கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தியாகிகள் அல்லது தியாகிகளின் குழந்தைகள். குடும்பத்தினர்கள் இதுவரை எத்தனை பேர் காதி இலாகாவில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர் ?

(இ) நூற்பு அமைப்பாளர்களாக வேலை பார்த்து சர்க்கார் கொள்கைக்கிணங்க வேலை இழந்த தியாகிகள், தியாகிகளின் குழந்தைகள், குடும்பத்தினர் காதி இலாகா வேலைக்கு மாற்றப்பட்டிருப்போர் எத்தனைபேர் ?

(உ) அவர்கள் எல்லோரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டனரா ? இல்லையென்றால் காரணமென்ன ?

(எ) அவர்கள் டிபாசிட் கட்டவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(ஐ) அப்படியானால், அத்தகைய நிபந்தனை நீக்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்** :

(அ) 159.

(இ) 102.

(உ) ஆம்.

(எ) சரக்குகள் அல்லது ரொக்கம் கையாளக்கூடிய பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் ரொக்க ஜாமீன் கட்ட வேண்டும்.

(ஐ) அனுமதிக்கப்படுவதற்கில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : இந்த நிபந்தனை இருக்குமானால் அவர்களுடைய சம்பளத்தில் இருந்தாகிலும் மாதாமாதம் ஒரு சிறு பகுதியை டெபாசிட்டாகப் பெறுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்** : அதைத் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்து பார்க்கிறேன்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை** : சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நமது அரசாங்கம் என்ன உதவி செய்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்** : என்னிடத்தில் அதுபற்றி தகவல் ஒன்றும் இல்லை.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை** : சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் தியாகிகளுக்குச் சில இடங்களில் நிலம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதில் பயனடைய முடியவில்லை,